**தலைப்பு 158 – பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என நான் தெரிவிக்கின்றேன்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) நிதிச் செயலாற்றல் கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவு ரூபா 20,000 ஆலும் பெறுவனவுகள் ரூபா 791,560 ஆலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.5 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திறைசேரி இறுதிக் கணக்கு கூற்று இலக்கங்கள் அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவுசெய்தல் மற்றும் செலவு வைத்தல் முற்பணக் கணக்குடன் இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது, |

**(ஆ) நிதி நிலைமை தொடர்பான கூற்று**

நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சிற்கு சொந்தமான ரூபா 2,750,000 ஆன வாகனமொன்று கையேற்கப்படாமல் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | வாகனத்தின் உரித்தினை முறைமையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனத்தை செலுத்துதல் வேண்டும் | இவ்வாகனம் நிதி இராஜாங்க அமைச்சராக இருந்த அமைச்சரொருவருக்கு அமைச்சின் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எடுத்து வரப்பட்டதுடன் அதனை இவ்வமைச்சிற்கு கையேற்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. |

**(இ) காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றில் கீழே காட்டப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i | செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய காசுப்பாய்ச்சலுக்கு வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - |
| ii | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - | - |
| iii | அமைச்சின் நிதி செயற்பாடுகளில் உள்ளீடு இல்லாதிருந்த போதிலும் நிதிச் செயற்பாடுகளாக ரூபா 5,999,073 குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | - |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணை பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை பதிவேடொன்று பேணப்பட வேண்டும் | பிணை பதிவேடொன்று பேணப்படவில்லை. |

**(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (i) **அரச நிதிச் சுற்றறிக்கை** | | | |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 10 மாத காலத்தின் பின்னர் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு 2019 மே 31 வரை மேற்கொண்டிருக்கவில்லை | வருடாந்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் சரியானதன்மை பொருள் மெய்மையாய்வு மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்ஏ | 2018 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு 2019 மார்ச் 11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. |
| **(ii) பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| 2016 மார்ச் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பாக பரீட்சிக்கப்பட வேண்டும். | துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு விளைவற்று இருத்தல் | | |
| செலவிடுவதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு எவ்வித பயன்பாடுமின்றி மொத்தி நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | நிதிஏற்பாட்டை பெற்றுக் கொள்ள திறைசேரிக்கு 2018 ஒக்தோபர் 06 ஆந் திகதி அறிவிக்கப்பட்டது. |
| (ஆ) மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளல் | | |
| செலவின விடயமொன்றுக்காக ரூபா 215 மில்லியனான மிகை நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அச்செலவின விடயங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டின் 82 சதவீதமாக இருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ரூபா 66.88 மில்லியனான மாற்றப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 62.91 மில்லியன் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்ல திருத்த வேலைக்கு செலவிடப்பட்டது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உற்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 2018/1266 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4.11 ஆம் பந்தியின் பிரகாரம் அரச | அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதிக்கு சமமாகும வகையில் கணக்குகளில் |

| | | |
|---|---|---|
| கணக்குகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 32 மில்லியனான பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அமைச்சின் பொறுப்புக்கள் பதிவேட்டில் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 41 மில்லியனாக இருந்தது. அதன்பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் ரூபா 9 மில்லியன் பொறுப்புக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளடக்கப்பட்டிருந்தது. |

## 2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்ட செயல் நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 09 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 318,000 கூட்டுத்தொகையான கட்டுநிதி 21 நாட்கள் முதல் 263 நாட்கள் வரையான வீசவ்சில் தாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டிருந்தது, | நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்ட செயல் நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும். | தாமதம் இடம் பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்கள் இடம்பெறுவதை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டமையால் 07 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 245,000 செயல்நிமித்த கட்டுநிதியிலிருந்து ரூபா 152,043 சேமிக்கப்பட்டு மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. அச்சேமிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த கட்டுநிதியில் 51 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது. | முறையான மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொண்டு செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட வேண்டும் | அவதானிப்புடன் இணங்குவதாகவும் எதிர் காலத்தில் மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 3 ஆவது காலாண்டின் அமைச்சின் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இயலளவு அபிவிருத்தி, பீங்கான் கூட்டுத்தாபனத்தை மீளமைத்தல், பீசீசீ கம்பனியை மீளமைத்தல், அறிவினை பகிர்ந்து கொள்ளும் வேலைத்திட்டங்கள் மற்றும் காணி மற்றும் ஆதனங்களை மதிப்பீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். | பீசீசீ மற்றும் சீசீசீ போன்ற நிறுவனங்களை மீளமைப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், அறிவினை பகிர்ந்து கொள்ளும் வேலைத்திட்டங்கள் இடமபெறவில்லை எனவும் மற்றும் ஆதனங்களை மதிப்பீடு செய்தல் செயற்பாடு வேறொரு அமைச்சின் கண்காணிப்பின் கீழும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் |
| (ஆ) | காணி மற்றும் ஆதனங்கள் மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தோட்டங்களை அளவிடுவதற்காக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதி முன்னேற்ற ரூபா 1,494,000 மாத்திரமாக இருந்தது. | வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்த வேண்டும்.. | போதியளவு நில அளவையாளர்கள் இல்லாமையால் அளவீட்டு நடவடிக்கை தாமதமடைந்தன |

### 3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கருத்துரை |
|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் 2011 யூன் 10 ஆந் திகதி அரச வளங்கள் | கூட்டுத்தாபனம் தொடர்பாக அமைச்சரவை | பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படாமலும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் வருமானத்தை சேகரித்தல் மற்றும் அந்நிறுவனங் களுக்காக நிதி அனுசரணை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டின் இறுதிவரை அமைச்சின் கீழ் காணப்பட்ட நட்டமடையும் நிறுவனங்களை செயற்திறனாக நிறுவனமொன்றாக பலப்படுத்தவதற்கு கூட்டுத்தாபனம் அமைச்சின் கீழ் எடுக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 31 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வேலைகள் ஆரம்பித்தல் மற்றும் பதவியணியினரை நியமித்தல் 2019 மே மாதம் வரை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | தீர்மானத்தை எடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும் | மேற்கொள்ளப்பட்ட 8 பேரின் சேவைக்காலம் முடிவடைந்தமையாலும் கண்காணிப்பிற்காக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பதவியணிருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிதி அமைச்சின் முன்மொழிவின் பிரகாரம் மீண்டும் கூட்டுத்தாபனத்தினை ஆரம்பிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் பதவியணியினருக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 3,973,258 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக அச்செலவினத்தில் 82 சதவீதம் ரூபா 3,263,241 செலவிடப்பட்டிருந்தது. நிறைவேற்றுனர் அல்லாத பதவியணியினருக்காக திட்டமிடப்பட்டிருந்ததன் பிரகாரம் | அமைச்சின் பணிகளை நிறைவேற்றுவதற்காக முறையான பயிற்சியளித்தல் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் தொடர்ச்சியான பயிற்சி வாய்ப்புக்கள் பதவியணியினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிறைவேற்றுனர் அல்லாத உத்தியோகத்தர்களால் கோரப்படும் பயிற்சிகளுக்காக சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முறையான நடைமுறையொன்றை பின்பற்றுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

பாடநெறிகள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. பயிற்சியளிப்பதற்காக தெரிவு செய்யும் போது பயிற்சி தேவைப்பாடுகள் இனங்காணுதல் அல்லது தெரிவு செய்தல் நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்தமை காரணமாக ஒரே உத்தியோகத்தர் குழுவிற்காக பல சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியளித்தல் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன.